# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2180/37 - 2020 ජුනි මස 19 වැනි සිකුරාදා - 2020.06.19

*2180/37 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1)(அ) ஆம் பிரிவின் கீழ் கோறளைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கோறளைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், கோறளைப்பற்று பிரதேச சபையின் இலக்கம் 14 - முறக்கொட்டான்சேனை வட்டாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலாமயில் கமலேஸ்வரன் என்பவர் அங்கம் வகிக்கின்ற தமிழ் மக்கள் விடுதலை புலிகள் என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கோறளைப்பற்று பிரதேச சபையின் இலக்கம் 14 - முறக்கொட்டான்சேனை வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக சாமித்தம்பி மணிசேகர் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது, கோறளைப்பற்று பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான இராஜேந்திரா சசீலன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு சாமித்தம்பி மணிசேகர் என்பவர் கோறளைப்பற்று பிரதேச சபையின் இலக்கம் 14 - முறக்கொட்டான்சேனை வட்டார உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**ஆர். சசீலன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கோறளைப்பற்று பிரதேச சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*மட்டக்களப்பு,*
*2020, யூன் 18.*

*07-196*


1A - G 32374 — 27 (2020/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*